-8-11-1993

Registered as a News papere    பக்கங்கள் 4    விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    ஐப்பசி 23    (08-11-93)    திங்கட்கிழமை    ஓசை 263

## நீர்மூழ்கி தயாரிப்பில் புலிகள் தீவிரம் அமெரிக்க பொறியியலாளர் உதவி

அமெரிக்காவிலிருந்து புலிகளால் அழைத்து வரப்பட்ட ஒரு தமிழ் பொறியியலாளரின் உதவியுடன் விடுதலைப் புலிகளால் நீர்மூழ்கிப் படகொன்று கட்டப்பட்டுவருவதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இப்பொறியியலாளர் புலிகளின் ஆதரவாளர் என்றும் நீர்மூழ்கிப் படகுகளைக் கட்டுவதில் நிபுணத்துவம் வாய்ந்தவர் எனவும் சிறிலங்கா பாதுகாப்பு படையினருக்கு தகவல் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. வாகனங்களின் எஞ்சின்களைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் இந்த நீர்மூழ்கிப் படகுக்கு தேவையான வேறு உதிரிப்பாகங்கள் வெளிநாடுகளில் இருந்து பெறப்பட்டுள்ளதாகவும், கடற்படைப் படகுகளை தாக்கி அழிக்கக் கூடியவகையில் இந்நீர்மூழ்கிப்படகை புலிகள் அமைத்து வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# போர்க்கால இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்த புதுவை; தலைவர் பிரபாகரன் பாராட்டு



''புதுவை இரத்தினதுரையின் படைப்பிலக்கியம் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு உந்து சக்தியாக இருக்கிறது. கவிதை உலகில் போர்க்கால இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்துக்கொடுத்த பெருமை அவரைச் சாரும். அவரது இலக்கியப் பணியின் முக்கியத்துவம் இதில்தான் தங்கியிருக்கிறது.'' இவ்வாறு தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் கவிஞர் புதுவை இரத்தினதுரையின் ''நினைவழியா நாட்கள்'' கவிதை நூலுக்கு வழங்கியுள்ள வாழ்த்துரையில் தெரிவித்துள்ளார்.


அவ் வாழ்த்துரையின் முழுவிபரமும் வருமாறு;

காலத்தின் மூச்சாக வாழ்வியக்கம் அசைகிறது. அந்தக் காலத்தையும் அந்தக் காலமாக விரியும் வாழ்வையும், அந்த வாழ்வாக அவிழும் மனித இன்னல்களையும், விளைச்சல்களையும் நுட்பமாகச் சித்திரிக்கும் கலை இலக்கியங்கள் உன்னதமானவை.

தான் பிறந்த மண், தான் வளர்ந்த சூழல், தான் உறவுகொள்ளும் சமூகம், தான் வாழும் காலம் என்ற ரீதியில் வாழ்க்கையே ஒரு கலைஞனது படைப்புத் தளமாக அமைகிறது. வாழ்வின் புறநிலை உண்மைகளை மூலப் பொருளாக எடுத்துக் கலைப்பொருள் படைப்பவனே சிறந்த கலைஞன்.

புதுவை அண்ணா என நாம் அன்பாக அழைக்கும் புதுவை இரத்தினதுரை ஒரு சிறந்த கலைஞர்.

அவர் இந்த மண்ணைக் காதலிப்பவர், இந்த மண்ணின் மக்களை நேசிப்பவர், இந்த மண்ணின் விடுதலையை இலட்சியமாக வரித்துக்கொண்டவர். மண், மக்கள், விடுதலை என்ற முப்பொருளை மூலப்பொருளாக எடுத்து கலைப்பொருள் படைப்பவர். கவிதை அவரது கலைப் (3ஆம் பக்கம் பார்க்க)



கவிஞர் புதுவை இரத்தினதுரையின் "நினைவழியா நாட்கள்" கவிதை நூல் வெளியீட்டு விழாவில் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் நூலை வெளியிட்டு வைப்பதனையும் அதனை மாமனிதர் திரு. அரசு பெற்றுக்கொள்வதையும், அருகே புதுவை இரத்தினதுரை நிற்பதனையும் படத்தில் காணலாம்.

## புலிகள் பற்றிய நிலைப்பாடு


# சிங்களக் கட்சிகள் மீது சபாநாயகர் கண்டனம்

## ராணுவத் தீர்விலும் அதிருப்தி

(கொழும்பு)

தென்னிலங்கையில் உள்ள அரசியற்கட்சிகள் இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு காண்பதற்கென விடுதலைப்புலி

# சிங்களக் கட்சிகள் மீது
# சபாநாயகர் கண்டனம்



கவிஞர் புதுவை இரத்தினதுரையின் "நினைவழியா நாட்கள்" கவிதை நூல் வெளியீட்டு விழாவில் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் நூலை வெளியிட்டு வைப்பதனையும் அதனை மாமனிதர் திரு. அரசு பெற்றுக்கொள்வதையும், அருகே புதுவை இரத்தினதுரை நிற்பதனையும் படத்தில் காணலாம்.

# தமிழர் உணர்வுகளுடன் ஒன்றிவிட்ட கவிஞர்

## வெளியீட்டு விழாவில் தமிழ்ச்செல்வன்

(யாழ்ப்பாணம்)

எமது உணர்வுகளுடன் ஒன்றிப்போய் இருந்தமையின் காரணத்தினாலேயே இந்திய இராணுவம் இங்கிருந்த காலத்திலே தமிழ்நாட்டில் புதுவை அண்ணா சில காலம் தங்கியிருந்த போதும்கூட அங்கிருந்த வண்ணமே போராட்ட நிகழ்வுகளை கவிதைகளில் வடிக்க அவரால் முடிந்தது. ஒலி நாடாக்கள் மூலம் அவரது கவிதைகளை அப்போது செவிமடுக்க நேர்ந்தவேளைகளில் இங்குள்ள நிகழ்வுகளை தத்ரூபமாகச் சித்திரிக்க கவிஞரால் எப்படி முடிகிறது என்று நாமும் ஏனைய எமது போராளிகளும் வியந்ததுண்டு. இவ்வாறு நேற்று மாலை கவிஞர் புதுவை இரத்தினதுரையின் நினைவழியா நாட்கள் கவிதை நூலின் வெளியீட்டு வைபவத்தில் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் ப. தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டார். தொடர்ந்து தமிழீழ தேசிய தலைவர் வே. பிரபாகரன் கவிஞர் புதுவை இரத்தினதுரையின் நூலுக்கு வழங்கிய வாழ்த்துரையையும் அவர் வாசித்தார்.

தமிழீழ கல்விக்கழக பொறுப்பாளர் வெ. இளங்குமரன் தலைமையில் நல்லூர் இளங் கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெற்ற இவ் விழாவை துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி, வண. பிதா பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர். மண்மீட்பு போரில் வீரச்சாவடைந்த வீரர்களுக்கும், பொதுமக்களுக்கும் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதை தொடர்ந்து பொன். சுந்தரலிங்கத்தின் தமிழ்த் தாய் வாழ்த்தும் இடம்பெற்றது. திரு. வெ. இளங்குமரன் தமது தலைமையுரையின்போது

(3ஆம் பக்கம் பார்க்க)

### கரும்புலிகளால் மூழ்கடிக்கப்பட்ட

# 'டோறா' படகில் இருந்த படையினர் நிலை என்ன?

## பெற்றோர் விளக்கம் கோருகின்றனர்

(கொழும்பு)

பருத்தித்துறை கடல் பகுதியில் விடுதலைப் புலிகளின் கரும்புலித் தாக்குதலுக்கு உள்ளான 'டோறா'வில் வந்த கடற்படையினரின் நிலை பற்றியும் அவர்களின் விபரங்களையும் தமக்கு வழங்குமாறு குறிப்பிட்ட கடற்படையினரின் பெற்றோர் ஜனாதிபதியிடமும் கடற்படையின் தலைமையகத்திடமும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கட்டளை அதிகாரி லெப்ரினன்ட் ஏ. வீ. விமலவீர, லெப்ரினன்ற் ஜே. பீ புஞ்சிகேவா, லெப்ரினன்ற் யூ. எஸ் சேனநாயக, இடைநிலை அதிகாரி சீ. ஜே. புஞ்சிகேவா, கடற்படை பொறியியலாளர்கள் ரீ. எம்; எஸ் விமலசிறி மற்றும் யூ. எஸ். எல். பெரேரா, தலைமை மாலுமி ஜே. ஆர். லியனகே, மின் பொறியியலாளர் சீ. எம் பத்மலால், சிப்பாய் ஏ. எம். அபயவர்தன, எம். ஜி. பீ. வீத்தாரன, எஸ். எம். கே. சுமனதாச ஆகியோரின் பெற்றோர்களே தமது பிள்ளைகளின் நிலைபற்றி கேட்டுள்ளனர்.

உடனடியாக இவர்கள் பற்றிய முழு விபரத்தையும் கண்டறியும் படியும் அதன் விபரங்களை தமக்கு அனுப்பிவைக்கும்படி கோரியும் கடிதம் எழுதியுள்ளனர்.

# இராணுவத் தீர்விலும் அதிருப்தி

(கொழும்பு)

**தென்னிலங்கையில் உள்ள அரசியற்கட்சிகள் இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு காண்பதற்கென விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த முயற்சிகள் மேற்கொள்ளாததை சிறிலங்கா பாராளுமன்றச் சபாநாயகர் எம். எச். முகமட் கண்டித்துள்ளார், இராணுவ முயற்சிகள் பயன்அற்றவை எனவும் அவர் பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.**

சபாநாயகர் முகமட் பி. பீ. ஸிக்கு வழங்கிய பேட்டி வருமாறு:

கேள்வி; விடுதலைப்புலிகள் உங்களை வடக்கே வருமாறு அழைத்தால் போவீர்களா?

பதில்; வடக்கே சென்று திரு. பிரபாகரனுடன் பேசினால் நல்ல முடிவு எடுக்கமுடியும் என்ற நம்பிக்கை எனக்குண்டு எனக்கென சொந்தக்கருத்தும் உண்டு. அதை எடுத்துக் கூறினால் நல்ல முடிவு எடுக்கலாம் என நம்பிக்கை உள்ளது.

கேள்வி; வடக்கு செல்ல நீங்கள் தயாராக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது?

பதில்; உண்மை என் சொந்தக்கருத்து இப் பிரச்சினையை கண்டிப்பாக தீர்க்கவேண்டும். அல்லாவிடின் இலங்கைக்கே பெரும் ஆபத்து தமிழருக்கு மட்டுமல்ல முஸ்லிம்களுக்கும் இது ஓர் பிரச்சினை என்பதை உணர்ந்துள்ளோம். எனவே இதுபற்றி நல்ல முடிவு எடுப்பது எல்லா மக்களின் கடமை என்ற ரீதியில் பிரபாகரனை சந்திக்க தயாராக இருக்கின்றேன் என கூறியுள்ளேன். ஆனால் எப்போ போவேன் என்பதுதெரியாது. அது அவர்கள்தான் தீர்மானித்துஅறியத் தந்தால் நான் போகத் தயாராக இருக்கிறேன்.

கேள்வி; தெற்கிலுள்ள அரசியற் கட்சிகள் அமைச்சர்

[3ஆம் பக்கம் பார்க்க]

### மர்மப்படகு இந்தியாவினது

(வடமராட்சி)

பருத்தித்துறை கடற்பரப்பில் கடந்த 4ஆம் திகதி நடமாடிய மர்ம பாய்க்கப்பல் இந்தியாவுக்குச் சொந்தமான கப்பல் என்று சொல்லப்படுகிறது.

'டிங்கி' என்று அழைக்கப்படுகின்ற இச் சிறிய கப்பல் எஞ்சின் மூலம் இயங்கக் கூடிய ஒரு பாய்க்கப்பல் ஆகும். இந்திய இராணுவம் இலங்கையிலே இருந்த போது இந்தியாவிலிருந்து இப்படைக்கு உணவாக இக்கப்பலின்மூலம் ஆடுகள்ஏற்றி வந்ததாகவும் மேலும் சொலலப்படுகிறது (யோ)

### மின்னல் தாக்கி சிப்பாய் பலி

வடக்கில் இராணுவ முகாமில் இருந்த சிப்பாய் ஒருவர் மின்னல் தாக்கி மரணமானார். பதுமியோ அப்புகாமிலாகே தயாரட்ண (33) என்ற சிப்பாயே இவ்வாறு மரணமானவராவார்.

# முஸ்லிம்களை பலியிட அரசாங்கம் முயற்சிக்கிறது!

## முஸ்லிம் காங்கிரஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அவசரகால சட்டத்தை பயன்படுத்தி முஸ்லிம்களின் அபிலாசைகளை அறவே கவனத்தில் எடுக்காமல் வடக்கையும், கிழக்கையும் இணைத்தவர்கள். இப்போது பிரிப்பதற்காக மட்டும் முஸ்லிம்களிடம் அனுமதி கேட்பதுஏன்? கிழக்கில் தேர்தல்களை நடத்த அரசு அவசரப்படுவது முஸ்லிம்களைப் பலிக்கடாக்களாக்கவா? வேண்டுமானால் அதே அவசரகால சட்டத்தைப் பயன்படுத்தி பிரித்து விட்டுப் போகலாமே? முஸ்லிம்கள் இனியும் பலியாவதற்கு தயாராகஇல்லை. இவ்வாறு முஸ்லிம் காங்கிரசின் மூத்த துணைத் தலைவர் கவிஞர் மருதூர்க்கனி பத்திரிகைகளுக்கு வெளியிட்ட அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

[3ஆம் பக்கம் பார்க்க]

# இந்தியத் தமிழர்களால் மலையகத்திற்கு ஆபத்து

## உடன் வெளியேற்ற தினேஷ் கோரிக்கை

மலையகத்தைவிட்டு இந்தியத் தமிழரை உடனடியாக வெளியேற்றாதுவிடின் வடக்கு கிழக்கில் இன்று ஏற்பட்டுள்ள நிலையேநாளைமலையகத்தில் ஏற்படும் என மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஸ் குணவர்தன எச்சரித்துள்ளார்.

கண்டி பொது நூலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் சிறிமா சாஸ்திரி ஒபபந்தத்தின் கீழ் நாட்டைவிட்டு வெளியேறாத ஒருலட்சத்து 69ஆயிரம் இந்திய தமிழர்களையும் விசேட விமானங்களை ஒழுங்கு செய்தாகுதல் உடனடியாக இந்தியாவிற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இதை உடனடியாக செய்யத் தவறுவோமாயின் மலையகம் எம்மிடமிருந்து பிரிந்து செல்வதை தவிர்க்கமுடியாதுபோய் விடும்.

ஒப்பந்த அடிப்படையில்

(3ஆம் பக்கம் பார்க்க)

உன்காலடியிலேஎதிரியின்கவசவாகனங்கள்
தலைக்குமேலேகுண்டு வீச்சுவிமானங்கள்
வலது பக்கம் பீரங்கிப் படகுகள்
இடது பக்கம் இராணுவப் படைகள்
இன்னும் உறங்கி என்னடா செய்வாய்
விழிகளைத் திறந்து வெளியே வாடா.

# வரி விளம்பரம்

**றெவி மூக்குக் கண்ணாடி அகம்**

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்துக் கண்ணாடி வழங்கப்படும். இல. 288, நாவலர் வீதி (யாழ். தனியார் வைத்திய சாலைக்கு முன்பாக) ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (6490)

**உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள**

உங்கள் கடிகாரங்களை, றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள டில்கா வாச் அன்ட் ரேடியோ வேக்ஸ், ஸ்ரான்லி வீதி, (வானவில் அருகாமை) யாழ்ப்பாணம் கிளை; கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-7848)

மீண்டும் யாழ்நகரில்

றொலெக்ஸ் ஸ்தாபனத்தாரின்

## தேன் சிந்தும் ஐஸ்கிறீம்

வகைகள்!

ஸ்பெசல் ஐஸ்கிறீம் புறூட் சலட் ஐஸ்கிறீம்

சொக்லட் ஐஸ்கிறீம், வனிலா ஐஸ்கிறீம்

மற்றும் சர்பத், கிறீம் சர்பத், ஐஸ் கோப்பி

அனைத்து குளிர்பான வகைகளுக்கும், சுவைமிகு

கோழிப்புரியாணி வகைகளுக்கும் மீண்டும்

★ உங்களை அழைக்கின்றார்கள் ★

"ஹோட்டல் றொலெக்ஸ் ஸ்தாபனத்தார்"

## ஹொட்டல் றொலெக்ஸ்

340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

(சி-7867)

**"கொழும்பில் கல்யாணம்"**

இந்து மகளிர் கல்லூரிப் பழைய மாணவிகள் நடித்து சபையோரை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்த 'கொழும்பில் கல்யாணம்' நாடகத்தை எழுதித் தயாரித்த அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள்:

1. கெட்டிக்காரர்கள்
2. முதலாம்பிள்ளை 30/-

(6439)

**தவறிவிட்டது**

26 10 93-ல் உரப்பையில் பிரயாணப்பை அடங்கிய முக்கிய பொருட்கள் ஆலங்கேணியில் தவறவிடப்பட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். நா. பரமேஸ்வரன் காளிகோயிலடி சங்கானை (6513)

**நவீன சிகிச்சை**

உங்களின் இருதயம் சீராக இயங்குகின்றதா? இரத்த அழுத்தத்துடன் நாடித்துடிப்பு எவ்வளவு? யாவும் Electronic Aunicular Pulsations Therapy யினாலும் Digital Electronic Meter மூலமும் நவீன வைத்திய உபகரணங்களினாலும் சகல நோய்கட்கும் சிகிச்சையளிக்கப்படும். இரெட்ணம் வைத்தியசாலை 129, ஸ்ரேசன் றோட் யாழ்ப்பாணம் (6518)

**விற்பனைக்குண்டு**

15 மாதம் நிரம்பிய பொமனேரியன் பெண் நாய் (5 மாதம்) ஆண் குட்டியும் விற்பனைக்குண்டு. தொடர்பு; கே மகேந்திரன், 53 இராணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (6512)

**"Wild" Survey Instrument For Sale**

Theo Dolite and Leve Contact:- P. Nadeswaran No. 51, Kandy Road, Chundikuli (in Front of oldpark) or A Sivaguru, Church Road, Chavakachcheri. (6514)

**காத்தவராயன் மேடையேறும்**

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆசிரியரும் பிரபல நடிகரும் இயக்குநருமான கலைவேந்தன் செ. குணபாலசிங்கம் அவர்களால் நெறிப்படுத்தப்பட்ட வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகா வித்தியாலய மாணவ மாணவிகள் நடிக்கும் "காத்தவராயன்" என்னும் சிந்து நடை நாட்டுக்கூத்து நாடகம் 11ஆம் திகதி வியாழக்கிழமை இரவு அதிபர் சைவப்புலவர் திரு. நா, க. தங்கரத்தினம் தலைமையில் மேடையேற்றப் படவுள்ளது.

## தேவை

யாழ் நகரில் பிரபல்யமுள்ள புகைப்பட நிலையத்தில் பணிபுரிய, புகைப்படத் துறையில் சகல அனுபவமுள்ள ஒருவர் உடன் தேவை.

விண்ணப்ப முடிவு: 15. 11. 93

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

**இலக்கம் 14, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

(சி-7872)

# அல்டி - ALDI

**தீபாவளி மலிவு விற்பனை**

நவம்பர் 1-ம் திகதி முதல் நவம்பர் 12-ம் திகதி வரை

★ சகல விதமான கைக்கடிகாரங்கள்,

★ சுவர் மணிக்கூடுகள்

முதலியன மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நம்பிக்கையானது! உத்தரவாதமுடையது!

**அல்டி** 269/1 மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(சி-7861)

**அரசினர் பொது வைத்தியசாலை, யாழ்ப்பாணம்**

## பதவி வெற்றிடம்

இவ்வைத்தியசாலையில் அமைய ஆங்கில சுருக்கெழுத்தாளர் [CASUAL ENGLISH STENO GRAPHER] பதவி ஒன்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:**

1. க.பொ.த (சா/த) பரீட்சையில் அல்லது சி.பொ.த பரீட்சையில் இரு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் தமிழ்மொழி, ஆங்கிலமொழி, கணிதம் உட்பட குறைந்தது நான்கு பாடங்களில் திறமைச்சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
2. அரசாங்க தொழில் நுட்பக்கல்லூரியில் ஆங்கில சுருக்கெழுத்து, தட்டெழுத்துப் பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது க. பொ. த (சா/த) சி.பொ.த பரீட்சையில் தட்டெழுத்து சுருக்கெழுத்துப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
3. 22. 11 93இல் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவராகவும், நாற்பது வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.


**யாழ் மாவட்ட அபிவிருத்திகூட்டுறவுச் சங்கம் (வ-து)**

**கலாசாலை வீதி, திருநெல்வேலி, கோப்பாய்**

## வெற்றிடம்

1. பதவி : கணக்கு பதிவாளர் 165/88 - 12
   வேதனம் : 855 - 30X7 - 40×8 - 1385
   இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் ஏனைய

# 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரவேங்கை

## கோட்டை சுக்ளா

(கதிரிப்பிள்ளை ஸ்ரீநந்தகுமாரன்)

இம்மண்ணில் (2- 6 1966) இம்மண்ணிற்காக (8- 11- 1988)

பாரினில் பரிதிபோல் பரியோவான் கல்லூரி
அறிவுச்சுடர் அகல் விளக்காய் உன்னுள்ளே
தூண்டிவிட்ட சுதந்திர வேட்கை
இம்மண் எங்கள் சொந்தமண் என்ற
ஈழத்தாகம் கொண்டாயே
மக்கள் வாழ்வில் ஒளியேற்றும் நின் நினைவு
உனக்கொளி தேடிக்கொண்டாயே அத்தீபாவளி நன்னாளில்
மறந்திடுமோ உன் நினைவு ஆண்டைந்தானாலும்
சிறுப்பிட்டி வாழ் மக்கள் மனதின் நின்றே.

க. கதிரிப்பிள்ளை குடும்பத்தினரும் உறவினர்களும்.

கோட்டை சுக்ளா வீதி,
சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி. 1993. 11. 08 (6504)

## நினைவு கூருகின்றோம் ... 1993-11-08

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் திருமலை-கட்டைபறிச்சான் பகுதியில் வீரச்சாவெய்திய,

❋ **இராசரத்தினம் குணரத்தினம்** (கட்டைபறிச்சான், மூதூர்-திருமலை)

1986ஆம் ஆண்டு கிளிநொச்சியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

2-ம் **லெப் ஜான்** (சங்கரலிங்கம் இதயகுமார் - கறுக்கேணி முள்ளியவளை)

1987ஆம் ஆண்டு பருத்தித்துறை, தும்பளைப் பகுதி

சுருக்கெழுத்தாளர் [CASUAL ENGLISH STENO GRAPHER] பதவி ஒன்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:**

1. க.பொ.த (சா/த) பரீட்சையில் அல்லது சி.பொ.த பரீட்சையில் இரு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் தமிழ்மொழி, ஆங்கிலமொழி, கணிதம் உட்பட குறைந்தது நான்கு பாடங்களில் திறமைச்சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
2. அரசாங்க தொழில் நுட்பக்கல்லூரியில் ஆங்கில சுருக்கெழுத்து, தட்டெழுத்துப் பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது க. பொ. த (சா/த) சி.பொ.த பரீட்சையில் தட்டெழுத்து சுருக்கெழுத்துப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
3. 22. 11 93இல் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவராகவும், நாற்பது வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் எனது பணிமனையில் 22.11 93 வரை ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பதாரர்கள் பின்பு என்னால் அறிவிக்கப்படும் திகதியில் எனது பணிமனையில் நடாத்தப்படும் நேர் முகப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். தெரிவு செய்யப்படுபவருக்கு அமைய அடிப்படையில் நியமனமும், அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ள சம்பள விகிதப்படி சம்பளமும் வழங்கப்படும்.

பணிப்பாளர்

(சி-7871)

---

# 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்:
05-07-1961

தாயக மண்ணில்:
08-11-1987

## மேஜர் பசிலன்
(நல்லையா அமிர்தலிங்கம்)

முத்தமிழ் தான் வளர்ந்த முல்லைநகர் பிறந்தாய்
நல்லையன் பெற்றெடுத்த நன்மகனாய் வளர்ந்தாய்
தலைவன் கருத்தை தலையில் சுமந்து நடந்தாய்
பாரதப் போர்ப்படை சிதறிட வைத்தாய்
சிங்கள போர்ப்படை அழிந்திட செய்தாய்
வேரி விட்டுத் தமிழ் மண்ணில் வித்துக்கள் வளர
மார்பினில் குண்டேந்திக் காவியமானாய்.

செங்குந்தா வீதி,
முள்ளியவளை.
(6472)

உன்பிரிவால் வாடும்
அன்பு அம்மா,
உடன்பிறப்புக்கள்.

---

முதலியன மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நம்பிக்கையானது! உத்தரவாதமுடையது!

# அல்டி

269/1 மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-7861)

---

## யாழ் மாவட்ட அபிவிருத்திகூட்டுறவுச் சங்கம்(வ-து)
## கலாசாலை வீதி, திருநெல்வேலி, கோப்பாய்

# வெற்றிடம்

1. **பதவி** :- கணக்கு பதிவாளர் 165/88 - 12
**வேதனம்** :- 855 - 30X7 - 40×8 - 1385
இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்

**கல்வி மற்றும் தகைமைகள்** :-
அ. கூ. ச. ஊ. 13ஆம் சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதவியில் அல்லது கணக்கு அலுவல்கள் பற்றிய பதவியொன்றில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம்அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 14ஆம் சம்பளத் திட்டத்தில் கணக்கு அலுவல்கள் பற்றிய பதவியொன்றில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது
ஆ. ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவியலாளர் நிறுவன மத்திய பரீட்சையில் சித்தி அல்லது
இ. கூட்டுறவுச் சங்க ஊழியர் (உயர்தரம்) க. பொ த (உயர்தரம்) கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தி

2. **பதவி** :- பால் நிலைய முகாமையாளர் 165/88 -12
**வேதனம்** :- 855 - 30X7 - 40x8 - 1385 இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**கல்வித்தகைமை** :-
அ. கூட்டுறவுச்சங்க ஊழியர் 13ஆம் சம்பளத் திட்டத்தில் முகாமை/ மேற்பார்வை மட்ட பதவி ஒன்றில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 14ஆம் சம்பளத் திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டபதவி ஒன்றில் நான்கு வருடங்களுக்குக்குறையாதஅனுபவம் அல்லது
ஆ. கூட்டுறவுப் பணியாளர் (உயர்தர) சான்றிதழ்/ க. பொ. த (உயர்தர) சான்றிதழ் மூன்று பாடங்களு' ன் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பால் தொடர்பான தொழில்நுட்ப அறிவுடன் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம்

**பொது**
**வயது எல்லை** :- வயது 23ற்கும் 40ற்கும் உட்பட்டதாகஇருக்கவேண்டும் (தற்போது கூட்டுறவு ஊழியராக இருப்போருக்கு இந்த நியதி செல்லுபடியாகாது)

**வசிப்பிடத்தகைமை** :- குறைந்த பட்சம் 2வருடங்களாவதுயாழ் மாவட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்.

**பிணைப்பணம்** :- கூ. வே. ஆணைக்குழு சட்டத்திற்கமைவாக சங்கம் தீர்மானிக்கும் தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

**உள்ளடக்கப்படவேண்டியவை** :- கல்வி, பிறப்பு, நற்சான்றுப் பத்திரங்களின் பிரதிகளை இணைத்தல வேண்டும்.

**விண்ணப்பப்பத்திரம் ஏற்கப்படு ்கடைசித் திகதி:- 20-11-93**

விண்ணப்பங்கள் யாவும் பதிவுத்தபாலில் மேற் சொல்லப்பட்ட விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும் கடித உறையின் இடது பக்க மூலையில் பதவியின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்

(சி-7869)

தலைவர்

---

உலகுக்கொளி தேடிக்கொண்டாயே அத்தீபாவளி நன்னாளில்

மறந்திடுமோ உன் நினைவு ஆண்டைந்தானாலும் சிறுப்பிட்டி வாழ் மக்கள் மனதின் நின்றே.

க. கதிரிப்பிள்ளை குடும்பத்தினரும் உறவினர்களும்.

கோட்டை சுக்ளா வீதி,
சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி. 1993. 11. 08

(6504)

---

# நினைவு கூருகின்றோம் ...
# 1993-11-08

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் திருமலை-கட்டை பறிச்சான் பகுதியில் வீரச்சாவெய்திய,

❋ **இராசரத்தினம் குணரத்தினம்** (கட்டைபறிச்சான், மூதூர்-திருமலை)

1986ஆம் ஆண்டு கிளிநொச்சியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப் ஜான்** (சங்கரலிங்கம் இதயகுமார்-கணுக்கேணி முள்ளியவளை)

1987ஆம் ஆண்டு பருத்தித்துறை தும்பளைப் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் நாதன்** [சிற்றம்பலம் பிரபாகரன்-திகிரி, தும்பளை-பருத்தித்துறை]

**சிறி** [சொக்கலிங்கம் சாந்தலிங்கம்-குடத்தனை மேற்கு-வடமராட்சி கிழக்கு]

**இன்** [கிறிஸ்தோபர் இசிதோர் இன்பராசா-புலோலி கிழக்கு-பருத்தித்துறை]

யாழ்-பண்டத்தரிப்புப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப் மயூரன்** [சங்கரப்பிள்ளை லோகேஸ்வரன்-களபூமி-காரைநகர்]

கீரிமலைப்பகுதியில் இந்தியப்படையினரின் எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**ஜெயம்** (இராஜேந்திரம் ஜெயக்குமார்-வலித்தூண்டல், கீரிமலை-யாழ்)

முள்ளியவளை, 3-ம் கட்டைப்பகுதியில் இந்தியப்படையின் எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**மேஜர் பசிலன்** [நல்லையா அமிர்தலிங்கம்-3-ம் வட்டாரம், முள்ளியவளை - முல்லைத்தீவு]

**2-ம் லெப். கிரிசாந்தன்** [யோகராசா அருளானந்தம்-செம்மலை-மணலாறு]

1988ஆம் ஆண்டு நீர்வேலி, சிறுப்பிட்டி தெற்குப் பகுதியில் இந்தியப்படையினர் சுட்டதில் வீரச்சாவெய்திய

**கோட்டைசுக்ளா** [கதிரிப்பிள்ளை சிறீநந்தகுமாரன்-சிறுப்பிட்டிதெற்கு, நீர்வேலி-யாழ்]

அளவெட்டிப்பகுதியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**பிரேம்குமார்**

சாவகச்சேரிப்பகுதியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட மாணவன்.

பண்டத்தரிப்புப்பகுதியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட இப்பகுதி பிரஜைகள்குழுத்தலைவர்.

1990ஆம் ஆண்டு வசாவிளான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய

**லெப். சிரஞ்சீவி** [கனகசபாபதி ஐங்கரன்-சுன்னாகம் தெற்கு-யாழ்]

தச்சன்காடுப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் விழுப்புண் அடைந்தநிலையில் மானிப்பாய் வைத்தியசாலையில் வீரச்சாவெய்திய

**கப்டன் செந்தில்** [சுப்பிரமணியம் குலஞானேஸ்வரன்-மாதகல் கிழக்கு-யாழ்]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்,

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி/7866)

சிந்தனைக்கு

உழுகின்ற காலத்தில் ஊரைச் சுற்றிவிட்டு
அறுக்கிற காலத்தில் அரிவாளைத் தேடி என்ன பயன்?
— தமிழ்ப்பழமொழி.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 08-11-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாக பீடம் 2823
த. பெ. எண் - 05

## விதைத்ததின் பயன்

பாகிஸ்தானில் கடந்த மாதம் நடந்த பொதுத்தேர்தலின் போது அந்நாட்டு இராணுவம் மேற்பார்வையாளர், மத்தியஸ்தர் ஆகிய ஸ்தானங்களை வகித்தது. 'ஜனநாயகத்தில்' இது ஒரு வேடிக்கையான அம்சம் தான் ஆனால், இதைவிட்டால் பாகிஸ்தான் ஜனநாயகத்திற்கு வேறுவழி இல்லை. அந்தளவிற்கு பாகிஸ்தானின் இராணுவத்தின் செல்வாக்கு அரசியலில் உயர்ந்துள்ளதோடு, பலமாகவும் உள்ளது. கடந்தகால ஆட்சி மாற்றங்களுக்கும், ஆட்சிக் கவிழ்ப்பிற்கும் இராணுவம் எந்தளவில் பங்காற்றியது என்பதை கவனித்தால் அது தெளிவாகும்.

தற்பொழுது சிறிலங்காவின் அரசியலிலும் இராணுவத்தின் செல்வாக்கு அவ்வாறே உயர்ந்து வருகின்றது. பாகிஸ்தானில் உள்ளது போன்று, இன்னமும் மத்தியஸ்தர் ஸ்தானத்திற்கு இராணுவம் உயராதுவிட்டாலும், தற்பொழுது அதிகாரத்தின் பலாபலனை கண்டுள்ள இராணுவம் ஆட்சியாளருக்குப் பக்கதுணையாக இருந்து அரசியலில்தனது பிடியையும், ஆதிக்கத்தையும் மிக வேகமாக வளர்த்துவருகின்றது.

அதேவேளை, அரசாங்கமும் இன்று இராணுவத்தின் உதவியின்றி சில நாட்கள் தானும் ஆட்சியில் நிலைத்து நிற்க முடியுமா? என்பதும் சந்தேகமானதே. அதாவது, அரசாங்கம் தேர்தல் நடத்துவதில் இருந்து எதிர்க்கட்சியினரின் ஜனநாயக ரீதியான போராட்டங்களை அடக்கி ஒடுக்குவது வரை இராணுவமே அரசிற்கு உதவி வருகின்றது.

இந்நிலையில், அரசாங்கக் கட்சியின் நலன்களைப் பாதுகாப்பதென்பது இராணுவத்தின் கடமையாக மாறியுள்ள அதேவேளை, இராணுவத்தின் நலன்களை கவனிப்பது ஆட்சியில் உள்ளவர்களின் பணியாகவும்மாறியது. அதாவது பரஸ்பர கவனிப்பானது அரசியலில் இராணுவத்தின் வளர்ச்சியைத் தவிர்க்க முடியாதது ஆக்கியுள்ளது. இந்தவகையில், 'ஜனநாயக அரசில்' இராணுவம் கணிசமான செல்வாக்குப் பெறுவது தவிர்க்க முடியாது போய்விட்டது.

இவ்வாறானதொரு நிலைமை ஏற்படுவதற்கு தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வை

விடுதலைப்புலிகளின் கைவசமுள்ள

# சகல ஆயுதங்களைக்கைப்பற்ற யுத்தம் தொடர வேண்டும்

### - காமினி ஜயசூரியா

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு இணைப்பு என்பது முழுச் சிங்கள சமூகத்தையும் காட்டிக் கொடுக்கும் செயலாகும் என நான் அன்றைய ஜனாதிபதிக்கு கூறினேன். இன்று இணைப்பை பிரிக்க முடியாமல் கஷ்டப்படுகின்றார்கள் என்று சிங்கள பாதுகாப்பு அமைப்பின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான காமினி ஜயசூரியா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இந்த நாட்டின் தேசிய இனம் சிங்களம். நாட்டில் இருப்பவர்கள் முழுவதும் பௌத்தர்கள். எனவே தேசிய மதம் பௌத்தமாகும். சிங்களத்திலிருந்து பௌத்த மதத்தை வேறுபடுத்த முடியாது.

இன்று வடக்கு கிழக்கு யுத்தத்தால் சிங்கள உயிர்களில் பல பலியாகின்றது. அன்று பயங்கரவாதிகளை நாம் சிறையில் அடைத்தோம். இன்று பயங்கரவாதிகள் எமது சிங்கள இளைஞர்களை சிறைகளில் அடைக்கின்றனர் இவர்களின் விடுதலை தொடர்பாக எவரும் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை சிங்கள இளைஞர்கள் தமது உயிர்களை தியாகம் செய்தே எமது நாட்டை காப்பாற்றிக்கொண்டுள்ளார்கள். எம்மை வாழ வைக்கவே அவர்கள் பலியாகின்றார்கள். இப்படியான நிலையில்லாவிட்டால் இன்று பௌத்த மதத்திற்கு ஆபத்து ஏற்பட்டு இருக்கும். பல இடர்களுக்கு மத்தியில் நாடு பிளவு படுவதை அவர்கள் தடுத்து நிறுத்தி வருகின்றனர்.

வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கான தீர்வை சில அனுட்டானங்களினாலும் கூடிப் பேசி கும்மாளமடிப்பதாலும் காணமுடியாது. யுத்த நடவடிக்கையே சிறந்தது என்று ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க கூறுகின்றார். இதுதான் உண்மையான தீர்வுக்கு வழியாகும். புலிகளிடம் இருக்கும் சகல ஆயுதங்களையும் அரசாங்கம் பெறும் வரையும் யுத்தம் தொடரவேண்டும் அந்த நிலையில்தான் வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு ஏற்படலாம் என்றும் தெரிவித்தார்.

## போராட்டத்தின் மூலமே தமிழர்களுக்கு எதிர்காலம்

### அமைச்சர் தொண்டமான்

சாதாரண மக்களின் விழிப்புணர்வுடன் கூடிய எழுச்சி மிகும் போராட்டத்தின் மூலமே தமிழ் மக்கள் தமது ஒளிமயமான எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்று அமைச்சர் எஸ். தொண்டமான் கூறியுள்ளார்.

மட்டக்களப்பு விபுலானந்தா இசைநடனக்கல்லூரியில் டிப்புளோமா சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரசியல் தலைவர்கள் ஆண்டாண்டு காலமாக பேசிக் கொண்டு இருந்தார்கள். இப்போதும் பேசிக்கொண்டு இருக்கின்றார்கள். ஆனால் இவற்றால் பயன் எதுவும் ஏற்படப் போவதில்லை எனவும் தெரிவித்தார்.

## கொழும்பு நகருக்குள் தற்கொலை போராளிகள்

கொழும்பு நகருக்குள் விடுதலைப் புலிகளின் இரண்டு பெண் தற்கொலைப் படையினர் ஊடுருவி உள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் கொழும்பு நகரில் தாக்குதல் நடாத்த திட்டமிட்டுள்ளதாகவும் இவர்களின் தங்கும் இடம் குறித்து தகவல் தருமாறு பொலிசார் கேட்டுள்ளனர்.

## சந்திரிக்கா - சிறீமணி இரகசிய பேச்சுவார்த்தை

(கொழும்பு)

மேல்மாகாண முதல் அமைச்சர் சந்திரிக்கா குமாரணதுங்காவும் லலித் அத்துலத் முதலியின் மனைவி சிறீமணி அத்துலத் முதலியும் கடந்த சில நாட்களாக சந்தித்து நீண்ட நேரம் பேச்சுக்கள் நடத்தியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அநுரா பண்டார நாயக்கா கட்சியை விட்டு வெளியேறி ஐ. தே. கட்சியுடன் சேர்ந்து கொண்டமை குறித்தும் காமினி திசா நாயக்காவும்

போர்க்கால

பொருள். அந்தக் கலையில் அவருக்கு இங்கு எவனும் நிகரில்லை.

புதுவை இரத்தினதுரையின் கவிதையில் ஒரு புதுமை இருக்கிறது; அழகும் ஆழமும் இருக்கிறது; ஒரு இசை இருக்கிறது;

## ஹர்சத்பால் முற்றுகை கைவிடப்பட்டது?

சிறிநகர் ஹர்சத்பால்முஸ்லிம் பள்ளிவாசல் இருபத்திநான்கு நாள் முற்றுகையை இந்திய இராணுவம் நேற்று கைவிட்டது.

மூன்று அரச தரப்புப் பிரதிநிதிகளுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் இரவு வரை பள்ளிவாசலில் நடந்த பேச்சுவார்த்தையைத் தொடர்ந்தே இராணுவம் முற்றுகையைக் கைவிட்டதாக ஜெர்மன் வானொலி அறிவித்தது.

தீவிரவாதிகள் ஆயுதங்களைக் கையளிக்க இணங்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## தடுப்பு முகாமிலிருந்து 17 இளைஞர்கள் விடுதலை

பண்டாரவளை இளைஞர் புனர்வாழ்வு முகாமில் மூன்று வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த வடக்கு கிழக்கைச் சேர்ந்த பதினெழு இளைஞர்கள் கடந்த மாதம் 17 ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் கடற்பிராந்தியங்களில் வைத்து கைது செய்யப்பட்டவர்களாவர்.

விடுவிக்கப்பட்ட பதினேழு இளைஞர்களில் வடக்கைச் சேர்ந்தவர்கள் 11 பேர். கிழக்கைச் சேர்ந்தவர்கள் 6 பேர். இவர்களில் பதினைந்துபேரது பெயர் விபரங்கள் பின்வருமாறு: ஏ. பத்மநாதன் (வல்வெட்டித்துறை), கே. கே. பிரேமதாஸ் (வல்வெட்டித்துறை), அலெக்ஸ் றொபேர்ட் வின்சன் (தம்பசிட்டி), அந்தோனிப்பிள்ளை (பலாலி) தற்போது கடடுவன் சந்தி, ஞானசீலன் (பொலிகண்டி), ஆர். சுப்பிரமணியம் (தொண்டமனாறு), என். சந்திரசேகரம் [முல்லைத்தீவு], ஜி. எல். ஜெயசீலன் [மாதகல்], கே. ராஜு (மயிலிட்டி), எம். சோமசுந்தரம் (தலைமன்னார்), கே. குணசேகரம் (மயிலிட்டி)

மற்றும் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பைச் சேர்ந்த தயானந்தம், இருதயநாதன், சிவா, ரகுநாதன்.

அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் மேலும் ஒரு தொகுதி இளைஞர்கள் விடுவிக்கப்படுவர் என தெரிவிக்கப்படுகிறது.

[யோ]

# நீர்த்தொட்டிக்குள் போட்டு பலகையால் மூடிவிடுவர்

## படையினரின் சித்திரவதை குறித்துவிபரிப்பு

(வடமராட்சி)

சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்ட எம்மை படையினர் விசாரணையின்போது ஆறடி நீர்த்தொட்டிக்குள் அமிழ்த்தி பெரிய பலகைகளால் மூடித் துன்புறுத்தினர் இவ்வாறு சித்திரவதை செய்தபோது பல இளைஞர்கள் இறந்துள்ளனர்.

இவ்வாறு பண்டாரவளை இளைஞர் புனர்வாழ்வு முகாமிலிருந்து கடந்தமாதம் 17-ம் திகதி விடுதலை செய்யப்பட்ட வடபகுதி இளைஞர்களில் ஒருவரும் தம்பசிட்டியில் வசித்து வரும் செம்பியன்பற்றைச் சேர்ந்தவருமான அலெக்ஸ் றொபேர்ட் வின்சன் எமது

போது எங்கள்மீது உயிரை வெறுக்கக்கூடிய வகையில் கடுமையான தாக்குதலை மேற்கொள்வர்.

பெற்றோல் ஊற்றிய சொப்பிங் பைகளால் எங்களது முகம், தலைகளை மூடி ஹீற்றர் மூலம் முகத்தையும் தலையையும் தாக்கிக்கொண்டிருப்பர். அத்தாக்குதல் எமக்கு மிகவும் பெரும் வேதனையாகவே இருக்கும். அது போதாது என்று தண்ணீர் தொட்டிக்குள் எம்மை மூழ்க வைத்து அரைமணிநேரம் தொட்டியை மூடிவிட்டுவிடுவர். அந்நடவடிக்கையின்போது ஒரு சில இளைஞர்கள் இறந்தனர்.

பெற்றோல் ஊற்றிய சொப்

ஈரச்சாக்கினால் எமது தலையை மூடிவிட்டு மூக்கு. வாய் துவாரங்களுடாக அளவுக்கதிகமாக நீரை ஊற்றிவிடுவார்கள். இது எங்களை பெரிதும் திக்குமுக்காடச் செய்யும்.

கண்கள் கைகள் கட்டப்பட்ட நிலையிலேயே எம்மை வைத்திருப்பர். விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது எங்கள்மீது இடை இடையே மின்சாரம் பாய்ச்சப்படும். நல்ல உணவும் போதிய வசதிகள் அற்றநிலையில் இருந்த நாங்கள் இராணுவத்தினரின் கொடுமைகளை தாங்கமுடியாமல் துவண்டு போய்விடுவோம்.

வடபகுதி இராணுவமுகாம்

வளர்த்துவருகின்றது.

அதேவேளை, அரசாங்கமும் இன்று இராணுவத்தின் உதவியின்றி சில நாட்கள் தானும் ஆட்சியில் நிலைத்து நிற்க முடியுமா? என்பதும் சந்தேகமானதே. அதாவது, அரசாங்கம் தேர்தல் நடத்துவதில் இருந்து எதிர்க்கட்சியினரின் ஜனநாயக ரீதியான போராட்டங்களை அடக்கி ஒடுக்குவது வரை இராணுவமே அரசிற்கு உதவி வருகின்றது.

இந்நிலையில், அரசாங்கக் கட்சியின் நலன்களைப் பாதுகாப்பதென்பது இராணுவத்தின் கடமையாக மாறியுள்ள அதேவேளை, இராணுவத்தின் நலன்களை கவனிப்பது ஆட்சியில் உள்ளவர்களின் பணியாகவும்மாறியது. அதாவது பரஸ்பர கவனிப்பானது அரசியலில் இராணுவத்தின் வளர்ச்சியைத் தவிர்க்க முடியாது ஆக்கியுள்ளது. இந்தவகையில், 'ஜனநாயக அரசில்' இராணுவம் கணிசமான செல்வாக்குப் பெறுவது தவிர்க்க முடியாது போய்விட்டது.

இவ்வாறானதொரு நிலைமை ஏற்படுவதற்கு தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வை சிங்கள அரசாங்கங்கள் காணமுற்பட்டதே காரணமாகும். அதாவது அரசியல் ரீதியில் தீர்க்கவேண்டிய இப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியாக தீர்வுகாண முற்பட்ட வேளை, தமிழர்களின் அடிப்படை உரிமைகள் எவையும் கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய அவசியமானவை அல்ல என்ற ரீதியில் இராணுவத்திற்கு அதிகாரங்களை அரசாங்கம் வழங்கியது. நாட்டின் வளங்களைப் பெருமளவில் இராணுவத்தின் செலவிற்கெனத் திருப்பியது.

இதன் காரணமாக இராணுவம் அதிகாரத்தினாலும், வள ஒதுக்கீட்டாலும் கிடைக்கும் நன்மைகளை கண்டு கொண்டது. அத்தோடு, ஜே. வி. பியினரை ஒடுக்குவதற்கென கிடைத்த அதிகாரமும் அரசாங்கம் தன்னில் தங்கியுள்ளதை இராணுவத்திற்கு பூரணமாக உணர்த்தியது. இதன்மூலம் தனது முக்கியத்துவத்தை இராணுவம் புரிந்து கொண்டது.

இந்த நிலையில்தான், இராணுவத்திற்கு அபகீர்த்தியையும், பாதகத்தையும் விளைவிக்க கூடிய கருத்துக்களையும், தகவல்களையும் வெளியிடும் அரசியல்வாதிகளையும், பத்திரிகையாளர்களையும் மிரட்டுவதற்கு இராணுவம் தொடங்கியுள்ளது. இந்த வரிசையிலேயே 'சண்டேரைம்ஸ்' பத்திரிகையில் 'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கையின் தோல்வி பற்றிஎழுதியபத்திரிகையாளர் இக்பால் அர்தாஸிற்கும், சமசமாஜக்கட்சித் தலைவர் பெர்னாட் சொய்சாவிற்கும் விடுக்கப்பட்ட கொலை மிரட்டலும் கொள்ளப்பட வேண்டும். அதாவது, இராணுவம் தனது செல்வாக்கையும், அதிகாரத்தையும் தொடர்ந்தும் பாதுகாக்க முற்பட்டதன் விளைவே இதுவாகும்.

ஆனால் இதற்குத் தனியாக இராணுவத்தினரைக் குறை கூறுவதில் அர்த்தமில்லை. இராணுவத்திற்குச் சந்தர்ப்பம் வழங்கிய அரசாங்கத்தையும், அரசியல்வாதிகளையுமே குறை சொல்ல வேண்டும்.

இந்த வகையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கே இதில் பெரும் பங்கு இருப்பினும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் இருந்து சிங்கள இடதுசாரி கட்சிகள் வரை சகலருக்குமே பங்குண்டு. சிங்கள இடதுசாரிகள் சரி, வலதுசாரிகள் சரி எவருமே தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பதைவிட இராணுவ தீர்வையே வற்புறுத்தினர். இதன் விளைவாகவே இன்று இராணுவத்தின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர். அதாவது விதைத்ததின் பயனை அனுபவிக்கின்றனர். இதில் யாரைக் குறை கூறிப் பயன் என்ன?

கொழும்பு நகருக்குள் விடுதலைப் புலிகளின் இரண்டு பெண் தற்கொலைப் படையினர் ஊடுருவி உள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் கொழும்பு நகரில் தாக்குதல் நடாத்த திட்டமிட்டுள்ளதாகவும் இவர்களின் தங்கும் இடம் குறித்து தகவல் தருமாறு பொலிசார் கேட்டுள்ளனர்.

## சந்திரிக்கா - சிறீமணி இரகசிய பேச்சுவார்த்தை

(கொழும்பு)

மேல்மாகாண முதல் அமைச்சர் சந்திரிக்கா குமாரணதுங்காவும் லலித் அத்துலத் முதலியின் மனைவி சிறீமணி அத்துலத் முதலியும் கடந்த சில நாட்களாக சந்தித்து நீண்ட நேரம் பேச்சுக்கள் நடத்தியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அநுரா பண்டார நாயக்கா கட்சியை விட்டு வெளியேறி ஐ. தே. கட்சியுடன் சேர்ந்து கொண்டமை குறித்தும் காமினி திசா நாயக்காவும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவும் நீண்ட நாட்களாக சந்தித்து பேச்சுகள் நடத்தியது தொடர்பாக நீண்ட நேரம் ஆராயப்பட்டதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

போர்க்கால பொருள். அந்தக் கலையில் அவருக்கு இங்கு எவரும் நிகரில்லை.

புதுவை இரத்தினதுரையின் கவிதையில் ஒரு புதுமை இருக்கிறது; அழகும் ஆழமும் இருக்கிறது; ஒரு இசை இருக்கிறது; ஒரு ஈர்ப்பு சக்தி இருக்கிறது

இந்தத் தேசத்தின் பண்பாட்டு மரபில் ஆழவேரோடி நிற்பதால் அவரது கவிதைக்கு அலாதியான வீச்சும், வலிமையும் உண்டு. சதையும் இரத்த தமுமாக இந்த மண்ணின் பண்பாட்டுப் படிமங்கள் அவரது கவிதைக்கு உயிர் வடிவம் கொடுக்கும்.

மனித அவலங்களையும், ஏக்கங்களையும் படிமக் காட்சிகளாகச் சித்திரித்து, இனவாதக் கொடூரத்தின் அராஜகத்தை அழுத்தமாக உணர்த்திக் காட்டுவதுடன் ஒடுக்குமுறைக்கு எதிரான ஆவேசம் மிக்க கொதிப்புணர்வையும் அவரது கவிதை தட்டி எழுப்புகிறது.

புதுவை இரத்தினதுரையின் படைப்பிலக்கியம் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு உந்து சக்தியாக இருக்கிறது. கவிதை உலகில் போர்க்கால இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்துக் கொடுத்த பெருமை அவரைச் சாரும். அவரது இலக்கியப் பணியின் முக்கியத்துவமும் இதில்தான் தங்கியிருக்கிறது;

எமது தேசத்தின் போராட்ட வாழ்வையும், வரலாற்றையும் தமிழீழஇலக்கிய இயக்கத்திற்குள் முதன்மைப்படுத்தி தமிழ்த் தேசிய பிரக்ஞையை விழிப்புறச் செய்ததில் அவரது பங்கு கணிசமானது. விடுதலைக்காக ஏங்கும் தமிழினத்தின் ஆன்ம தாகமாக வெளிப்பாடுகாணும் அவரது கவிதை போர்க்கால இலக்கியத்திற்கு புதுமையும், செழுமையும் கொடுக்கிறது.

புதுவை இரத்தினதுரை இலக்கியப் படைப்பாளியாக மட்டுமன்றி ஒரு இலட்சியப் போராளியாகவும் எமது விடுதலை இயக்கத்தில் இணைந்து நிற்பவர். இலக்கியப் படைப்பிலும், இலட்சியப் பயணத்திலும் அவரது பணி சிறப்புடன் தொடர எனது நல்லாசிகள்.

முஸ்லிம்களை அவ் அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில் கிழக்கில் அபிப்பிராய வாக்கெடுப்பும், தேர்தலும் நடத்த அரசு அவசரப்படுவது தமிழ் முஸ்லிம் உறவை மீண்டும் சீர்குலைக்கவே உதவும். எனினும் தேர்தல் ஒன்று நடைபெற்றால் அது முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிட்டே தீரும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்தியத் வெளியேறுவதை விரும்பாத தொண்டமான் பாராளுமன்றத்தில் தமது நிலையை விரிவுபடுத்த இவர்களின் வாக்குரிமையைப் பெற்றுக் கொடுத்துள்ளார்.

தொடர்ந்தும் ஆட்சியை நிலைநிறுத்தும் நோக்குடன் வாக்குரிமை வழங்கப்பட்டு அவர்களுக்கு உரிமைகளும் வழங்கப்படுகின்றன. இதனால் எமது இனத்திற்கு ஏற்பட்டுள்ள ஆபத்தை நாட்டின் தலைவர்கள் உணரவில்லை.

இதனால் மலையகத்தில் சிங்களவர்கள் பல இடங்களிலும் சிறுபான்மையினராக வாழவேண்டிய ஓர் நிலை உருவாகி வருகின்றது. இந்நிலை நீடித்தால் சிங்களவர் மலையகத்தை நாளை ஆளும் அளவிற்கு வரமாட்டார்கள். அதனால் தான் தொண்டமான் தொடர்ந்தும் அரசனாக இருக்கிறார்.

எனவே இது விடயத்தில் சகல சிங்கள அரசியல் வாதிகளும் இலங்கையில் அனுதாபம் கொண்டவர்களும் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.

## படையினரின் சித்திரவதை குறித்துவிபரிப்பு

(வடமராட்சி)

சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்ட எம்மை படையினர் விசாரணையின்போது ஆறடி நீர்த் தொட்டிக்குள் அமிழ்த்தி பெரிய பலகைகளால் மூடித் துன்புறுத்தினர் இவ்வாறு சித்திரவதை செய்தபோது பல இளைஞர்கள் இறந்துள்ளனர்.

இவ்வாறு பண்டாரவளை இளைஞர் புனர்வாழ்வு முகாமிலிருந்து கடந்தமாதம் 17-ம் திகதி விடுதலை செய்யப்பட்ட வடபகுதி இளைஞர்களில் ஒருவரும் தம்பசிட்டியில் வசித்து வரும் செம்பியன்பற்றைச் சேர்ந்தவருமான அலெக்ஸ் றொபேர்ட் வின்சன் எமது வடமராட்சி செய்தியாளருக்கு விபரித்தார்.

அவர் மேலும் விபரிக்கையில் நான் இந்தியாவிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்த போது 1991-ம் ஆண்டு மார்ச் மாதம் 14ஆம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்டு காரைநகர் முகாமுக்கு கூட்டிச் செல்லப்பட்டேன். அங்கே ஐந்து நாட்கள் தடுத்து வைக்கப்பட்டு கடும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டேன். விசாரணைகளின் போது எங்கள்மீது உயிரை வெறுக்கக் கூடிய வகையில் கடுமையான தாக்குதலை மேற்கொள்வர்.

பெற்றோல் ஊற்றிய சொப்பிங் பைகளால் எங்களது முகம், தலைகளை மூடி ஹீற்றர் மூலம் முகத்தையும் தலையையும் தாக்கிக்கொண்டிருப்பர். அத்தாக்குதல் எமக்கு மிகவும் பெரும் வேதனையாகவே இருக்கும். அது போதாது என்று தண்ணீர் தொட்டிக்குள் எம்மை மூழ்க வைத்து அரைமணிநேரம் தொட்டியை மூடிவிட்டுவிடுவர். அந்நடவடிக்கையின்போது ஒரு சில இளைஞர்கள் இறந்தனர்.

பெற்றோல் ஊற்றிய சொப்பிங் பையால் எமது முகம் தலைகளை மூடி தொடர்ச்சியாக ஒருமாதம் ஹீற்றர்மூலம் தாக்கிக்கொண்டிருந்தனர்.

ஈரச்சாக்கினால் எமது தலையை மூடிவிட்டு மூக்கு, வாய் துவாரங்களுடாக அளவுக்கதிகமாக நீரை ஊற்றி விடுவார்கள். இது எங்களை பெரிதும் திக்குமுக்காடச் செய்யும்.

கண்கள் கைகள் கட்டப்பட்ட நிலையிலேயே எம்மை வைத்திருப்பர். விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது எங்கள்மீது இடைஇடையே மின்சாரம் பாய்ச்சப்படும். நல்ல உணவும் போதிய வசதிகள் அற்றநிலையில் இருந்த நாங்கள் இராணுவத்தினரின் கொடுமைகளை தாங்கமுடியாமல் துவண்டு போய்விடுவோம்.

வடபகுதி இராணுவமுகாம்களிலும் பார்க்க தென் பகுதி முகாம்களில் தாக்குதல் சம்பவங்கள் ஓரளவு குறைவென்றே சொல்லலாம் என்றார் (யோ)

சிங்களக் தொண்டமானின் சமாதான முயற்சிகளை வரவேற்கவில்லை. உங்கள் முயற்சிக்கு அரசு அல்லது தெற்கு அரசியல் கட்சிகள் ஆதரவு வழங்குமா?

பதில்; நான் சபாநாயகர் என்ற முறையில் செல்கிறேன். இதற்கு அரசின் சம்பந்தம் இல்லை. வடக்கே எந்த நிபந்தனையும் இல்லாது பேசவே போகிறேன் அதன் பின் பார்ப்போம் என்னமுடிவு என்று.

கேள்வி; இலங்கையில் இனப் பிரச்சினை இல்லை பயங்கரவாதப் பிரச்சினைதான் உள்ளது என ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க கூறி வருகிறாரே இதுபற்றி உங்கள் கருத்து?

பதில்; அதுபற்றி எனக்கு ஒன்றும் கூறமுடியாது. பொதுவாக இப்பிரச்சினையை நாம் நோக்கினால் இது அரசியல் தீர்வு காணப்படவேண்டியது. இதுகுறித்து அங்கு போய் ஆலோசித்தபின்பே இதற்கான பதிலைக் கூறமுடியும்.

கேள்வி; புலிப்படை உங்களை வருமாறு அழைத்தால் போவீர்களா?

பதில்; நிச்சயம் போவேன். போவது அவசியம். நாம் அனைவரும் மனிதர்களாக இப் பிரச்சினைக்கு ஓர் முடிவு எடுக்கவேண்டும். அல்லாவிடின் தமிழர்கள் மட்டுமல்ல சிங்கள மக்களுக்கும் பிரச்சினையே என்றார் சபாநாயகர் மூகமட்.

தமிழர் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள் ஒரு இலக்கியப்பேழை என்று வர்ணித்தார். சங்ககால இலக்கியங்களில் விரவிக் காணப்படும் தமிழனின் வீரம் மானம் போன்ற உணர்வுகள் அதன் பின்னர் வந்த இலக்கியங்களில் பெரிதும் போற்றப்படவில்லை. தமிழினம் அக் காலத்தின் பின்னர் பெருமளவில் தூங்கிக்கிடந்ததுதான் அதற்கு காரணமாகும். புதுச்சேரியிலே புகலிடம் தேடிய பாரதியாரும், புதுவையிலேயே பிறந்த பாரதிதாசனும் தமிழின உணர்வை போற்றிய போதும் அது தமிழீழத்தின் புத்தூர் மண்ணில் பிறந்த புதுவை இரத்தினதுரையின் கவிதைகளிலேயே முழுமை பெறுகின்றது. இதனால் புத்தூர் மண்ணும் பெருமை பெறுகின்றது எனக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து வெளியீட்டுரை நிகழ்த்திய தமிழீழ கல்விக் கழகத்தைச்சேர்ந்த வே. பாலகுமாரன் தமது உரையின் போது கவிஞர் புதுவை இரத்தினதுரை பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக நின்று கும்மி பாடுகின்றபோதும் சரி, பரணி பாடுகின்றபோதும்சரி சம காலத்து நிகழ்வுகளைப் பதிவுசெய்யும் காலத்தின் குரலாக அவர் கடந்த இருபதாண்டுகளுக்கும் மேலாக அவர் எழுதிவருகின்றார். அவரது வார்த்தைக்கும் வாழ்க்கைக்கும் இடையே இடைவெளி இல்லாத நிலைதான் அவர் தொடர்ந்தும் இங்கு நிலை பெற்றிருப்பதற்கு அடிப்படையாகும். தமிழீழத்தின் கொற்றவைக் கவிஞராக தமிழீழ தேசியத் தலைவரால் இவர் கௌரவிக்கப்படும் காலம் வெகு தூரத்தில் இல்லை. எத்தனையோ கவிதைகளை நான் படித்திருக்கின்றேன். அவற்றில் பெரும்பாலும் தனிமை, விரக்தி, ஏமாற்றம், ஏக்கம் போன்ற உணர்வுகளே பிரதிபலிக்கின்றன. ஆனால் புதுவையின் கவிதைகளில் நம்பிக்கை சுடர் விட்டுப் பிரகாசிக்கிறது. இதற்கு 'குயிலேபாடு' என்ற பாட்டு ஒரு உதாரணமாகும் என்றும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து முதற்பிரதியை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் ப. தமிழ்ச்செல்வன் வெளியிட்டுவைக்கமாமனிதர் அரசு பெற்றுக்கொண்டார். சிறப்புப்பிரதிகளும் விநியோகிக்கப்பட்டதை தொடர்ந்து மதிப்புரைகளை பண்டிதர் வீ. பரந்தாமன், கவிஞர் சோ. பத்மநாதன், பேராசிரியர் அ. சண்முகதாஸ், பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோர் நிகழ்த்தினர். நூலாசிரியரின் உரையைத் தொடாந்து தமிழிசை அரங்கும் இடம் பெற்றது.

## அரச ஊழியருக்கு விசேட முற்பணம்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க சேவையாளர்களுக்கு அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் 1000 ரூபா விசேட முற்பணம் வழங்கப்படவுள்ளது என கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல் ஒன்று தெரிவிக்கின்றது,

இம் முற்பணம் நிரந்தர சேவையில் உள்ளவர்களுக்கே வழங்கப்படவுள்ளதாக தெரிய வருகின்றது.

வங்கிக்கடன்பெற்று அதைத் திரும்பச் செலுத்தாதவர்களுக்கு இப்பணம் வழங்கப்படமாட்டாது என தெரியவருகின்றது. (பா)

# கருணாநிதியுடன் சமரசம் செய்ய கோபாலசாமி 10 நிபந்தனைகள்

(சென்னை)

திராவிட முன்னேற்றக்கழகத்தின் கருணாநிதி அணியுடன் வை. கோபாலசாமி அணி மீண்டும் இணைந்து கொள்ள வேண்டுமாயின் கருணாநிதி அணி பத்து நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. இந்த பத்து நிபந்தனைகளையும் தி. மு. க. தலைவர் கருணாநிதி ஏற்றுக்கொள்ளும்பட்சத்தில் இவருடன் சமரசம் செய்து கொள்ளவும் இணைந்து செயற்படவும் கோபாலசாமி அணிதயார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி பத்து நிபந்தனைகளும் வருமாறு;

ஃ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கொலை மிரட்டல் தகவலுக்கும் கோபாலசாமிக்கும் தொடர்பு உள்ளதாக புலனாய்வுத் துறை கூறியதை தான் நம்பவில்லை என்றும் வை. கோபாலசாமி மீதுபூரண நம்பிக்கை இருக்கின்றது என்றும் கருணாநிதி அறிக்கை விடவேண்டும்

ஃ விளக்கம் கோராமலேயே கட்சியிலிருந்து நீக்கப்பட்ட வை. கோபாலசாமி ஆதரவாளர்கள் மீண்டும் சேர்க்கப்பட வேண்டும்.

ஃ கருணாநிதியின் மகனான மு க. ஸ்டாலினின் தலைமையிலான இளைஞர் அணியினர் தனி அதிகாரங்களை ரத்து செய்து அந்த அணியும் கட்சியின் ஏனைய அணிகள் போல செயற்குழுவிற்கு கட்டுப்பட்டு செயற்படவேண்டும்.

ஃ எந்தப் பொறுப்பிலுமே இல்லாமல் கட்சியில் குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் கருணாநிதியின் இன்னொரு மகனான மு. க. அழகிரியை மதுரையிலிருந்து சென்னைக்கு அழைத்துக் கொள்ள வேண்டும்.

ஃ கட்சியின் அனைத்துப் பதவிகளிலிருந்தும் கருணாநிதியின் மருமகனான முரசொலி மாறன் ராஜினாமா செய்ய வேண்டும் மாறனின் பிடியிலிருந்து கருணாநிதி விடுவிக்கப்பட வேண்டும்.

ஃ வை. கோபாலசாமியை நீக்குவதற்கு தீர்மானம் இயற்றிய மூன்று மாவட்ட தி. மு. க பிரிவுகள் மீதும், அவற்றை தூண்டியவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஃ கட்சியின் தலைமைநிலைய செயலாளர்கள் கூட அந்தந்த மாவட்ட செயலாளர்களின் அனுமதியுடன் தான் பொதுக் கூட்டங்களில் பேசலாம் என்ற தீர்மானத்தை வாபஸ் பெற வேண்டும்.

ஃ தி மு க ஆட்சி மன்றக் குழுவை மீண்டும் ஏற்படுத்த வேண்டும்.

ஃ கட்சியின் சொத்தான முரசொலியின் ஆசிரியரை மாற்றி அனைவருடைய செய்திகளும் பத்திரிகையில் பாரபட்சமின்றி வெளிவர வேண்டும்.

ஃ எந்தப் பதவிக்கும் யாரையும் நியமனம் செய்யக்கூடாது பொதுக்குழுவே சகல நிர்வாகிகளையும் தெரிவு செய்ய வேண்டும்.

இந்த நிபந்தனைகளை தஞ்சை [கிழக்கு] மாவட்ட தி. மு. க செயலாளர் மீனாட்சி சுந்தரம் கருணாநிதி அணியைச் சேர்ந்த சேலம்மாவட்ட தி. மு. க செயலாளர் வீரபாண்டிய ஆறுமுகத்திற்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளார்.

# கிருபானந்தவாரியார் மாரடைப்பால் மரணம்

(சென்னை)

பிரபல ஆன்மீகப்பேச்சாளர் திருமுருக கிருபானந்தவாரியார் (87) நேற்றுக்காலை மாரடைப்பால் விமானத்திலேயே காலமானார். லண்டனிலிருந்து பம்பாய்க்கு நேற்று காலை விமானத்தில் வந்திறங்கிய இவர் பம்பாயிலிருந்து சென்னை வரும் போது விமானத்திலேயே மாரடைப்பு ஏற்பட்டு மரணமானார்.

அவ் விமானம் சென்னை வந்திறங்கிய போது அவர் இறந்து விட்டார் என அவருடன் பயணம் செய்த அவரது குடும்பத்தினரால் தெரிவிக்கப்பட்டது. இருவாரங்களின் முன் சமய சொற்பொழிவாற்ற வெளிநாடு சென்ற போது நெஞ்சு வலி காரணமாக லண்டன் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றார்.

வாரியாரின் பூதவுடல் சென்னை பெரம்பூரில் உள்ள அவரின் இல்லத்திற்கு எடுத்து செல்லப்பட்டு பின் அவரின் சொந்த ஊரான காங்கேய நல்லூருக்கு எடுத்து செல்லப்பட்டு இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. இன்று பிற்பகல் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும் வாரியாரின் மறைவு குறித்து தமிழக அரசியல் தலைவர்கள் இரங்கற் செய்திகள் விடுத்துள்ளனர்.

# தமிழ்த்தளிர் வெளியீடு

(சுன்னாகம்)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி தமிழ் மன்றத்தினர் ''தமிழ்த்தளிர்'' என்னும் சஞ்சிகையொன்றை எதிர் வரும் புதன்கிழமை வெளியிடவுள்ளனர். செல்வன் ந.ராஜயோகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் வெளியீட்டு விழாவில் சுன்னாகம் இலங்கை வங்கி முகாமையாளர் திரு. சி. விக்கினராசா சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வார். (11)

# உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் மாவட்ட நிலைப்போட்டியில் இன்று பின்வரும் பாடசாலைகள் மோதுகின்றன.

பல்கலைக்கழக மைதானத்தில் 2. 30 மணிக்கு நடைபெறும் 19 வயது அணியினருக்கான மோதலில் கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்தை எதிர்த்து நடேஸ்வராக் கல்லூரியும் 3. 00 மணிக்கு எழுதுமட்டுவாள் கணேசா வித்தியாலயத்தை எதிர்த்து புனிதசாள்ஸ் வித்தியாலயமும் மோதுகின்றன.

பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் 19 வயது அணியினரின் மோதலில் 2. 30ற்கு நாவாந்துறை ஆர். சியை எதிர்த்து யாழ்மத்தியகல்லூரியும் 3. 00 மணிக்கு ஏழாலை ஸ்ரீமுருகனை எதிர்த்து புனிதஹென்றி அரசரும் மோதுகின்றன.

யாழ் இந்து மைதானத்தில் 17 வயது அணியினரின் போட்டியில் 2.30ற்குபுனிதஜேம்ஸை எதிர்த்து யா/ சந்திரபுர ஸ்கந்தவ ரோதய ம. வியும் மோதுகின்றன.

# கோபாலசாமியை கட்சி ஏன் விலக்கக் கூடாது?

## செயலாளர் விளக்கம் கோருகிறார்

[சென்னை[

கட்சிக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக ஏன் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கு விளக்கமளிக்குமாறு வை. கோபாலசாமி கேட்கப்பட்டுள்ளார்.

இது குறித்த விளக்கத்தை ஒருவாரகாலத்திற்குள் அனுப்பி வைக்குமாறு தி. மு க. பொதுச்செயலாளர் அன்பழகன், வை. கோபாலசாமிக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். இக்கடிதம் பற்றிய அறிக்கை செய்தியாளருக்கும் வழங்கப்பட்டது.

இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்னரும் கட்சியின் ஒழுக்க விதிகளை மீறிய வை. கோபாலசாமி பலதடவைகள் மன்னிப்பு கேட்டுள்ளார். 1989 ஆம் ஆண்டு தி. மு. க பதவிக்கு வந்ததும் கோபாலசாமி கட்சிக்கு அறிவிக்காமல் இலங்கை சென்று விடுதலைப் புலிகளின் தலைவர்களை சந்தித்தார்.

அப்போது முதலமைச்சராக இருந்த கருணாநிதி கோபாலசாமியின் இலங்கை விஜயத்தை பொறுப்பற்ற செயலெனக் கண்டித்து மன்னிப்பு கேட்ட பின் மன்னித்தார்.

இவரின் இலங்கை விஜயத்தால் புதுடில்லி சென்று ராஜீவ் காந்திக்கு விளக்கமளிக்க வேண்டியிருந்தது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கொழும்பில் சுற்றிவளைப்பு; 169 தமிழ் இளைஞர் கைது

[கொழும்பு]

கொழும்பில் நேற்று முன் தினம் இரவு 169 தமிழர்கள் சிறிலங்கா படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்

நேற்று முன்தினம் இரவு கொழும்பின் புறக்கோட்டைப் பகுதியை நூற்றுக்கணக்கான இராணுவத்தினரும் பொலிசாரும் இணைந்து திடீரெனச் சுற்றிவளைத்து தேடுதல் நடாத்தினர்.

அப்பகுதியிலிருந்த விடுதிகள் வர்த்தக நிலையங்கள், வீடுகள் அனைத்தும் சல்லடை போட்ட பொலிசார் விடுதிகளில் தங்கியிருந்தோர், வர்த்தக நிலையங்களில் தொழில் புரிந்தோர், உரிமையாளர்கள் உட்பட 169 தமிழர்களை கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

அங்கு பல மணி நேரம் இவர்கள் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டபின் அனைவரும் விடுவிக்கப்பட்டதாக கொழும்பு செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

## 41-ம் நாள் வீர அஞ்சலி




# லலிதா பிடவை மாளிகை

உங்களை அழைக்கிறது


# உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

## 07-11-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11543

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-0536, 43-3576, 28 4183. 40-2394, 24-6646, 24-5955, 41-9111, 24 5703, 24-4726, 24 4703, 28-0248' 26 4376, 28-4255, 24 7078, 26-1321, 26-4610, 24 8429, 27-0991, 41 9995.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

இல்லை.


# கொள்வனவுகள் செலவா?

இல்லை! வரவுக்கு வழி

ன ஒழுங்கு நடவடிக்கை எடு க்கக் கூடாது என்பதற்கு விள க்கமளிக்குமாறு வை. கோபா லசாமி கேட்கப்பட்டுள்ளார்.

இது குறித்த விளக்கத்தை ஒருவாரகாலத்திற்குள் அனு ப்பி வைக்குமாறு தி. மு. க. பொதுச்செயலாளர் அன்பழ கன், வை. கோபாலசாமிக்கு கடிதம் ஒன்றை எழுதியுள் ளருக்கு முன்னரும் கட்சியின் ஒழுக்க விதிகளை மீறிய வை. கோபாலசாமி பலதடவைகள் மன்னிப்பு கேட்டுள்ளார். 1989 ஆம் ஆண்டு தி. மு. க பதவிக்கு வந்ததும் கோபால சாமி கட்சிக்கு அறிவிக்காமல் இலங்கை சென்று விடுதலைப் புலிகளின் தலைவர்களை சந் தித்தை பொறுப்பற்ற செய லெனக் கண்டித்து மன்னிப்பு கேட்ட பின் மன்னித்தார்.

இவரின் இலங்கை விஜயத் தால் புதுடில்லி சென்று ராஜீவ் காந்திக்கு விளக்கம ளிக்க வேண்டியிருந்தது என் றும் அந்த அறிக்கையில் குறி ப்பிடப்பட்டுள்ளது.


# லலிதா பிடவை மாளிகை

உங்களை அழைக்கிறது

தங்களின்

★ திருமண வைபவங்களுக்கு ஏற்ற ★

## கூறைத் தினிசுகள்

காஞ்சிபுரம், செந்தூரப்பூ, பெனாரஸ், மைசூர் சில்க்ஸ், பட்டுவேட்டிகள்

மற்றும்

பலவகை சாறிகளுக்கும், வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சூட்டிங், சேட்டிங்

கண்ணைக் கவரும் றெடிமேட் ஸ்கேட் & பிளவுஸ், மாட்டின் சேட், ஜிப்ஸ் சாரம் முதலானவற்றுக்கு

இன்றே நாடுங்கள்

யாழ்நகரின் முன்னணி நிறுவனம்

# லலிதா பிடவை மாளிகை

5 - 6 நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(சி/7873)




29-09-1993-ல் அல்லிப்பளையில் நடை பெற்ற மிகப் பெரிய மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட

## மேஜர் குமரன்

(மணியச் சிறி சிவநாதன்)

| | |
|---|---|
| தாயின் மடியில்: | தாயக மண்ணில்: |
| 03-05-1969 | 29-09-1993 |

புயலும் வீசி ஓயலாம்
பூகம்ப பீரங்கு வெடிக்கலாம்
வயலும் கமையும் அழியலாம்
வறிய நிலைகள் தோன்றலாம்
துயரம் நெஞ்சில் நிறையலாம்
துன்ப வனங்கள் வரலாம்
வியத்தகு மண்ணின் வீரர் காலடி
வந்து பதித்திட விடுவேனோ
எரியுது எம்தேச மிங்கே எனக்கினி
ஏனிந்தத் தேகமென் றெழுந்து மண்ணில்
எரிதணல் வீசியே விழிகள் விரிந்து
எங்கள் மண்காத்த புலிவீரன்
புரிந்திட முடியா உணர்வுகளுடனே
புதைந்து குழியில் வித்தாய் விழுந்தான்
சரித்திரம் ஆனான் சந்ததி வாழ்த்தும்
தற்கொடை தமிழ்மண் விடியலுக்-காகும்.

8-11-1993 திங்கட்கிழமை இவரது வீட்டில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இவரின் பிரிவால் வாடும்
அன்புத் தந்தை,
சகோதரர்கள்.

861, ஐந்துசந்தி,
ஆஷாத் வீதி,
யாழ்ப்பாணம். (சி/7875)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 07-11-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11543

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-0536, 43-3576, 28 4183. 40-2394, 24-6646, 24-5955, 41-9111, 24 5703. 24-4726, 24 4703, 28-0248' 26 4376, 28-4255, 24 7078. 26-1321, 26-4610, 24 8429, 27-0991, 41 9995.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

இல்லை.


## கொள்வனவுகள் செலவா?

## இல்லை! வரவுக்கு வழி

எமது வாடிக்கையாளருக்கு
மாதாந்தம் மூன்று பரிசுகள்

ரூ. 2500/- ரூ. 1500/- ரூ. 1000/-

இதுவரை ஆறு அதிர்ஷ்டசாலிகள்
அடுத்தது நீங்களா?

மலிவு விலையில் பொருட்கள் வாங்கி
பரிசும் பெற்றிட

# ★ எழிலகம் ★

மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-7874)


## மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி இராமநாதன்

இணுவிலைச் சேர்ந்த சின்னத்தம்பி இராமநாதன் 1993-11-07 ஆம் திகதி சிவபதம் அடைந்து விட்டார். இவர் சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற செல்வி சாரதாதேவி, திருமதி சுசீலாதேவி, தபானந்தன் (ஆசிரியர், கோண்டாவில் சி. சி. த. க. பாடசாலை), கருணானந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. பொ. பாலசுப்பிரமணியம் (பொறியியலாளர், சீமெந்துக் கூட்டுத்தாபனம்), திருமதி சந்திரலோசனி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பாக்கியம், இராசம்மா, யோகம்மா, துரைராசா, ஞானமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். தகனக் கிரியைகள் 1993-11-07 ஆம் திகதி நடைபெற்றது. இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. தபானந்தன்
(மகன்)

ஆனந்த வாசம்,
மஞ்சத்தடி,
இணுவில். (6521)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம்ஆண்டு நவம்பர் மாதம் 8ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.